நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நியம இல. 02

இருப்புக் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு இருப்பு பெறுமதி கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) நியம இல. 24

அரசாங்க மானியங்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு 100% பிற்போடப்பட்ட வருமானமாகக் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 26.78% அளவு மாத்திரமே பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் மிகுதி தொடர்பாக நியமத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 371,252 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வங்கியால் அறவிடப்படும் வங்கிக் கட்டணமான ரூபா 70,073 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையிலும் பார்க்க ரூபா 1,100,948 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைவேலைப் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சேவையில் இருந்து ஓய்வு பெற்ற 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 885,823 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிராததுடன் அப் பெறுமதி கணக்குகளிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 மற்றும் 2009 ஆண்டுகளுக்காக டயலொக் நிறுவகத்திடம் இருந்து பெறவேண்டிய ரூபா 672,000 வாடகை வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மூன்று தொலைபேசி நிறுவகங்களிடம் இருந்து பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 186,656 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கட்டுநாயக்கா தேசிய நிலையம், வெள்ளவத்தை, பேருவளை மற்றும் கல்முனை போன்ற பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் கையேற்கப்பட்டிராததுடன் அப் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளில் அதிகாரசபையால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஏ) செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 114,964 ஆல் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) வெளிநாட்டிற்குச் சென்ற இரண்டு ஊழியர்கள் இருவர் உடன்படிக்கையினை மீறியமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,367,731 தொகையினை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அத்தொகை கணக்குகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ஆறு வங்கிக் கணக்குகளின் ரூபா 629,376 தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 12 வங்கிக் கணக்குகளின் மீதிகளும் அது தொடர்பான துணைப் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்ட தொகைகளுக்கும் இடையே ரூபா 5,256,783 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) பரீட்சை மீதி மற்றும் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 10,856,229 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 33,759,448 தொகையான கடன்பட்டோரினதும் ரூபா 33,417,017 தொகையான கடன்கொடுத்தோரினதும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான காரியாலயங்கள் தொடர்பான ரூபா 17,513,629 தொகையான மீதிகள் தீர்க்கப்பட்டிராததுடன் இதற்காக அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன்களுக்காக 5% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ரூபா 33,417,017 கூட்டுமொத்தத் தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 3,234,236 தொகையான மீதி 06 ஆண்டு காலத்திற்கும் ரூபா 2,103,803 தொகையான மீதி 10 ஆண்டு காலத்திற்கும் மேலாகக் காணப்பட்டன.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பின்வரும் விடயங்கள் அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|
| இருப்பு | 11,365,410 | மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், விபரமான பட்டோலைகள் |
| காணிகள் | 46,939,652 | உரிமையை உறுதிப்படுத்தும் உரித்துறுதி |
| முற்பணங்கள் | 23,940,366 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| வங்கி மற்றும் காசு மீதி | 41,095,486 | மேற்படி |
| நானாவித கடன்பட்டோர் | 33,759,448 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| கடன்கொடுத்தோர் | 33,417,017 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| நிலையான வைப்புக்கள் | 6,307,875 | நிலையான வைப்புச் சான்றிதழ் |

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இறுதி இருப்பு, வாகனம் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 25,000 இற்கு மேலான கொடுப்பனவிற்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத 87 சந்தர்ப்பங்கள தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்டன. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i. நி.பி. 188(2) | 1999 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் வைப்பிலிடப்பட்ட போதும் தேறாத ரூபா 25,961 தொகையான வைப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நி.பி. 264(1) | அனைத்து கொடுப்பனவிற்காகவும் பெறுனரிடம் இருந்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ரூபா 990,935 |

| | | |
|---|---|---|
| | | தொகையான 22 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. | நி.பி. 371(2)(இ) | வழங்கப்படும் முற்பணம் உரிய செயற்பாடு முடிவுற்ற உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 41,804,696 தொகையான முற்பணங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| iv. | நி.பி. 396 | செல்லுபடிக் காலம் கடந்த ரூபா 247,303 தொகையான 32 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| i. | 1992 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1997 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த மிகுதி வாகனங்களில் உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. | 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.6(v) மற்றும் 1.3.1(iii) ஆம் பிரிவுகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, குழு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டிய 08 உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறாக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(ஈ) நிதி அமைச்சுச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 | அரசாங்க தொழில்முயற்சிகளின் வளங்கள் அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட லாகாது என்ற ஏற்பாடுகள் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| | மற்றும் பிரிவு மற்றும் 9.4 ஆம் பிரிவுகள் | கவனம் செலுத்தப்படாது அதிகாரசபையின் ஒரு வாகனம் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு அதற்காக ரூபா 438,427 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய என்பீஏ/8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் நிறுவகச் சுற்றறிக்கை<br>------------------------------------------------------- | |
| | 3.1.4, 3.2.2 மற்றும் 3.4.2 ஆம் பிரிவுகள் | அரசாங்க வேலைகள், மற்றும் சேவைகளுக்காக இயலுமான வரையில் போட்டி விலைகள் கோரப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்கையில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| ii. | 3.4.1(ஈ) ஆம் பிரிவு | ரூபா 50 – 150 மில்லியனுக்கு இடையிலான நிர்மாண வேலைகள் செயற்திட்டத்திற்காக அமைச்சின் கொள்வனவு குழுவின் மூலம் (MPC) ஆகக் குறைந்தது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் ஐவரிடம் இருந்தேனும் விலைகள் கோரப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| iii. | 8.13.3 ஆம் பிரிவு | ஒப்பந்த முரண்களானது ஏற்றுக்கொள்ளப் பட்ட சாத்தியமற்ற ஏற்பாட்டு எல்லைக்குள் இருக்க வேண்டியதுடன் இது ஒப்பந்தப் பெறுமதியின் 10% இற்கு மேற்படலாகாத போதிலும் அந்த எல்லையினை மிகைத்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

**2.2.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்**

1963 நவம்பர் 30 ஆம் திகதிய 1024 எப்/600/29 சீடீ ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் "அரச கூட்டுத்தாபனங்கள்" தாமதமின்றி நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களைத் தயாரித்து அதற்காக உரிய அமைச்சுக்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அப் பிரமாணங்கள் தயாரிக்கப்படும் வரை அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதிகாரசபை இதற்கு இணங்கும் வகையில் தற்போதைய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன் அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தரின் வருடாந்த விடுமுறை மற்றும் மேலதிக நேர வேலைப் படிகள் தொடர்பாக மாத்திரம் கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

**2.2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையில் 3 ஆண்டுகள் சேவைக்காலத்தினைக் கொண்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு தமது பதவியின் செயற்பாட்டுத்துறைக்குத் தொடர்பற்ற பாடநெறிகளைப் பின்பற்றப்படுவதற்காக ரூபா 180,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒரு நபருக்காக ரூபா 75,000 செலவிட்டு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 08 ஆலோசகர்கள் பயிற்சிப் பாடநெறிக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 05 பேர் பாடநெறியை விட்டு விலகியிருந்ததுடன் மேலும் இருவர் சேவையை விட்டு விலகியிருந்தமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 187,400 ஆகக் காணப்பட்டது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ரூபா 75,837,077 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,007,604 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 70,829,473 தொகையான அதிகரிப்பைக் காண்பித்ததுடன் இவ்வதிகரிப்பினை பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

விபரம்

| | முரண் | | |
|---|---|---|---|
| | சாதகமானவை | பாதகமானவை | கூட்டுத்தொகை |
| வருமானம் | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினத்திற்கான மானியம்/ உதவி - அரசாங்க | - | 2,200,000 | - |
| - ஏனையவை | - | 6,025,761 | - |
| உற்பத்தி மற்றும் பயிற்சி பிரிவுகளிலிருந்து உழைத்த இலாபம் | 2,406,353 | - | - |
| ஏனைய வருமானம் | 14,270,078 | - | - |
| பிற்போடப்பட்ட வருமான மாற்றங்கள் | 36,516,560 | - | - |
| | 53,192,991 | 8,225,761 | 44,967,230 |
| செலவினம் | | | |
| நிலைய மற்றும் நிர்வாகச் செலவினங்கள் | - | 84,139,681 | |
| பயிலுனர் பயிற்சிச் செலவினங்கள் | - | 31,657,022 | |
| | - | 115,796,703 | - |
| பற்றாக்குறையின் தேறிய அதிகரிப்பு | | | 70,829,473 |

3.2 **விபரமான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் போதான நிதி நிலமைகள் முன்னைய ஆண்டுடனான முரண்கள் பின்வருமாறாகும்.

**நிதி நிலைமைகள்**

| | 2011 | 2010 | முரண்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் | 695,392,889 | 419,827,153 | 65.64 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | 26,242,970 | 64,305,802 | (59.19) |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 11,365,410 | 10,528,029 | 7.95 |
| பெறவேண்டிய மீதி | 77,311,464 | 75,461,890 | 2.45 |
| வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் | 49,436,018 | 11,938,512 | 314.09 |
| குறுகிய கால முதலீடுகள் | 38,547,183 | 35,579,071 | 8.34 |
| வழிக் காசு | 7,463,725 | 25,556,075 | (70.79) |
| காசு மற்றும் வங்கி மீதி | 41,095,486 | 40,696,390 | 0.98 |
| **மூலதனம்** | | | |
| தேசிய பயிலுனர் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி நிதியம் | 304,919,126 | 344,180,565 | (11.41) |
| மூலதன ஒதுக்கம் | 1,424,714 | 1,424,714 | - |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 131,313,097 | 123,584,940 | 6.25 |
| பிற்போடப்பட்ட வருமான மானியங்கள் | 388,092,268 | 115,405,689 | 236.29 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| செலுத்த வேண்டிய மீதி | 121,105,941 | 99,297,014 | 21.96 |

3.3 **செலவினங்களின் அதிகரிப்பும் மூலதனக் குறைவுச் சந்தர்ப்பங்களும்**

மீளாய்வாண்டின் போது தேறிய சொத்துக்களினதும் நடைமுறைச் சொத்துக்களினதும் வேறுபாடும் திரவத்தன்மை விகிதமும் பின்வருமாறாகும்.

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| தேறிய சொத்துக்கள் | 306,343,840 | 345,605,279 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 104,113,345 | 100,462,953 |
| நடைமுறை விகிதம் | 1.86:1 | 2.01:1 |
| திரவ விகிதம் | 1.77:1 | 1.91:1 |

4 **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றுகை**

அதிகாரசபையின் பயிற்சி நிறுவகங்களில் வருடாந்தம் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள், ஆண்டின் போது கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் கற்கைநெறிகளைப் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் தொடர்பான விபரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | 2011 | | | | 2010 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிரதேசம்/ பயிற்சி நிலையம் | வருட ஆரம்பத்தில் இருந்த எண்ணிக்கை | ஆண்டின் போது சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | ஆண்டின் போது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த எண்ணிக்கை | ஆண்டின் இறுதியில் கற்கைநெறிகளைப் பயின்று கொண்டிருந்த எண்ணிக்கை | வருட ஆரம்பத்தில் இருந்த எண்ணிக்கை | ஆண்டின் போது சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | ஆண்டின் போது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த எண்ணிக்கை | ஆண்டின் இறுதியில் கற்கைநெறிகளைப் பயின்று கொண்டிருந்த எண்ணிக்கை |
| யாழ்ப்பாணம் | 1,280 | 1,300 | 908 | 1,396 | 1123 | 1,075 | 918 | 1,280 |
| கிளிநொச்சி | 502 | 1,125 | 247 | 1,153 | 42 | 460 | - | 502 |
| முல்லைத்தீவு | 28 | 369 | 32 | 345 | - | 28 | - | 28 |
| வவுனியா | 852 | 497 | 653 | 594 | 834 | 886 | 868 | 852 |
| மன்னார் | 1,068 | 674 | 936 | 674 | 847 | 676 | 455 | 1,068 |
| அநுராதபுரம் | 760 | 1,058 | 870 | 738 | 411 | 1,109 | 762 | 760 |
| பொலனறுவை | 438 | 689 | 295 | 692 | 280 | 496 | 338 | 438 |
| திருகோணமலை | 504 | 1,454 | 1,034 | 696 | 526 | 717 | 1,057 | 504 |
| புத்தளம் | 364 | 474 | 226 | 517 | 425 | 529 | 274 | 364 |
| கொழும்பு | 5,045 | 2,360 | 3,620 | 2,964 | 4036 | 2,339 | 2,016 | 5,045 |
| கம்பஹா | 1,557 | 1,213 | 1,018 | 1,517 | 1345 | 1,429 | 811 | 1,557 |
| இரத்தினபுரி | 749 | 618 | 487 | 752 | 629 | 721 | 468 | 749 |
| குருநாகல் | 954 | 1,251 | 539 | 1,295 | 828 | 1,461 | 983 | 954 |
| கேகாலை | 614 | 809 | 189 | 1,064 | 546 | 713 | 400 | 614 |
| கண்டி | 1,243 | 1,256 | 1,169 | 1,083 | 1159 | 1,314 | 944 | 1,243 |
| மாத்தளை | 667 | 757 | 301 | 994 | 498 | 873 | 714 | 667 |
| நுவரெலியா | 912 | 785 | 835 | 708 | 876 | 681 | 192 | 912 |
| மட்டக்களப்பு | 606 | 764 | 414 | 629 | 628 | 669 | 809 | 606 |
| அம்பாறை | 1,099 | 1,180 | 1,071 | 965 | 968 | 1,477 | 976 | 1,099 |
| பதுளை | 1,043 | 1,035 | 996 | 887 | 1124 | 979 | 868 | 1,043 |
| மொனறாகலை | 807 | 530 | 383 | 844 | 792 | 688 | 283 | 807 |
| களுத்துறை | 595 | 532 | 201 | 826 | 468 | 483 | 240 | 595 |
| காலி | 1,341 | 1,162 | 966 | 1,348 | 1420 | 1,638 | 1,572 | 1,341 |
| மாத்தறை | 1,254 | 1,240 | 1,136 | 1,113 | 1282 | 1,390 | 1,421 | 1,254 |
| அம்பாந்தோட்டை | 868 | 1,219 | 834 | 1,135 | 792 | 1,005 | 1,165 | 868 |
| பொறியியல் தொழிநுட்ப நிறுவகம் | 1,457 | 437 | 452 | 1,389 | 1522 | 289 | 539 | 1,457 |
| மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவகம் | 700 | 419 | 262 | 765 | 625 | 331 | 270 | 700 |
| பயிலுனர் பயிற்சி நிறுவகம் | 804 | 460 | 784 | 445 | 769 | 409 | 199 | 804 |
| இயந்திரவியல் பயிற்சி | 447 | 4,926 | 3,636 | 1,737 | 568 | 2,915 | 4,727 | 447 |
| பகுதி நேரக் கற்கை நெறிகள் | - | 1,886 | 1,542 | 344 | - | - | - | - |
| | 28,558 | 32,479 | 26,036 | 29,609 | 25,363 | 27,780 | 24,269 | 28,558 |

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் இறுதியில் அதிகாரசபையின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தகவல்கள் அடங்கிய செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் சேர்த்துக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த அளவில் 75% இனை அதிகாரசபை அடைந்திருந்தது. மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு சதவீதத்தில் குறைவு 0.24% முதல் 68.71% வரையான வீச்சில் காணப்பட்டது. 25 மாவட்டங்களில் 19 மாவட்டங்கள் இலக்கிடப்பட்ட அளவைச் சேர்த்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பயிற்சியைப் பூர்த்திசெய்யும் பயிலுனர்களின் எண்ணிக்கை இலக்கிடப்பட்டிராததுடன் 26,036 பயிலுனர்கள் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்திருந்ததுடன் 16,500 சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 15,190 மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(இ) தொழிற்துறை வழிகாட்டிப் பிரிவினால் 219 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 17,000 பங்குபற்றுனர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 13 செயற்பாட்டு நிலையங்கள் 364 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 29,991 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டிருந்தனர். இது இலக்கிடப்பட்ட அளவைப் பார்க்கிலும் 12,991 ஆல் அதாவது 76.42% ஆல் அதிகரிப்பாகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 17 மில்லியன் செலவில் பதவியணியில் 150 உத்தியோகத்தர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப் பட்டிருந்ததுடன் 618 உத்தியோகத்தர்கள் உள்ளூர் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும், 28 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர்.

(உ) 36 தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித்திட்ட மேனும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது தொலைக்கல்வி மற்றும் ஆங்கில கல்வியின் கீழ் 18,500 பயிலுனர்களை பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் பயிற்றுவிக்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பான உள்ளபடியான தகவல்கள்

கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் கீழ் மாவட்டக் காரியாலயங்களுக்காக 12,312 பயிற்சிப் பாடப்புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 7 ஆங்கிலப் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயிலுனர் படிகள் மாதாந்தம் தொடர்ச்சியாகச் செலுத்தப்பட்டிராததுடன் இதன் காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய பயிலுனர் படிகள் ரூபா 34,718,572 கூட்டுமொத்ததமாகக் காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபையினால் சுங்கக் கட்டணமாக ரூபா 2,940,000 செலுத்தப்பட்டு ஒரு ஜீப் வண்டி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் இந்த வண்டியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 2,263,362 செலவிடப்பட்டிருந்தது. இந்த வண்டி 2010 யூன் 10 ஆம் திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும் விபத்துத் தொடர்பாக விசாரணைகள் நடாத்தல், நேர்ந்த நட்டங்கள் மற்றும் சேதங்களைக் கணித்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 பெப்ரவரி 23 ஆம் திகதி சுங்கக் கட்டணமாக ரூபா 1,134,000 செலுத்தி அதிகாரசபைக்குப் பெறப்பட்டிருந்த ஒரு மோட்டார் வாகனம் 2012 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது ஊர்காவற்துறை மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபை வளவினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த மூன்று தொலைபேசி நிறுவனங்களின் பரிவர்த்தனைக் கோபுரங்களுக்காக முறைப்படியாக உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆண்டிற்கான பெறவேண்டிய வருமானத்தினை முறையாக

அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பெறப்படும் சகல பணமும் ஆண்டிற்கான வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் விளம்பர நடவடிக்கைகளாக 12 பகுதிகளைக் கொண்ட ஓரங்க குறுநாடகம் ஒன்றைத் தயாரிப்பதற்காக நிறுவகத்தினால் ரூபா 847,500 தொகையைச் செலவிடப்பட்டிருந்த போதிலும் இது 2012 செப்தெம்பர் மாதமளவிலும் ஒளிபரப்பப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் 12 நடைமுறைக் கணக்குகளில் ரூபா 1,072,313 முதல் ரூபா 11,212,787 வரையான வங்கி மீதிகள் நிலவியதுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,648,088 ஆகக் காணப்பட்டது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

அதிகாரசபைக்கு அவசியமான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனம் நிராகரிப்பதற்கு காரணங்கள் குறிப்பிடப்படாது கூடுதலான விலைகளில் கொள்வனவு செய்தமையால் இரு சந்தர்ப்பங்களின் போது ரூபா 799,575 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் வாகனங்களைப் பழுதுபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலையைப் பார்க்கிலும் கூடுதலான விலைக்கு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதனால் 8 சந்தர்ப்பங்களின் போது ரூபா 524,976 தொகை அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 ஏனைய அரசாங்க நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் 9 ஊழியர்கள் வேறு நிறுவகங்களில் சேவையாற்றுவதற்காக சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களது சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,527,708 தொகையும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 4,167,004

தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 04 பேர் சேர்க்கப்பட்ட நாள் முதல் வேறு நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

### 4.6 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஊழியர் வகை | 2011 | | | | 2010 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | வெற்றிடங்கள | மிகைகள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | வெற்றிடங்கள் ~~/(மிகை)~~ | மிகைக |
| நிறைவேற்றுத் தரம் | 138 | 88 | 50 | - | 138 | 95 | 43 | - |
| எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் | 515 | 466 | 49 | - | 515 | 494 | 21 | - |
| கனிஷ்ட தரம் | 110 | 97 | 13 | - | 110 | 103 | 7 | - |
| அமைய | - | 119 | - | 119 | - | 127 | - | 127 |
| | 763 | 770 | 112 | 119 | 763 | 819 | 71 | 127 |

### 4.7 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

4.7.1 மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற திடீர் விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்ப்பிற்காக செலவிடப்பட்ட தொகையில் பெறப்பட்ட காப்புறுதி இழப்பீடு கழிக்கப்பட்டு நிலுவைப் பணத்தை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமையால் அதிகாரசபைக்கு ரூபா 113,111 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

4.7.2 2010 யூன் 23 ஆம் திகதி அதிகாரசபைத் தலைவரின் கடிதத்திலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 5,000 மேற்படும் சந்தர்ப்பத்தின் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட வேண்டும் எனக் காண்பிக்கப்பட்ட போதிலும் 49 சந்தர்ப்பங்களின் போது ஒரு நிறுவகத்தில் இருந்து மாத்திரம் விலைக்கோரல்கள் பெறப்பட்டு பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 1,165,709 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 05. கணக்களி பொறுப்பும் நல்ஆளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆம் திகதிய பீஎப்/பீஈ/21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 06 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 யூன் 06 ஆம் திகதியுமே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டுத்திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈດ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டமும் வருடாந்த செயற்பாட்டுத்திட்டமும் பணிப்பாளர் சபையால் 2011 சனவரி 17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டிற்காக செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் காண்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மதிப்பிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையே 10% முதல் 174% வரையான

வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) காசு மற்றும் வங்கிக் கணக்குகள்
(இ) கணக்கீடு
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) வாகனப் பயன்பாடு
(ஊ) பயிலுனரும் பயிற்சி நடவடிக்கைகளும்
(எ) பதவியணி முகாமைத்துவம்
(ஏ) நலன்புரி நிதியக் கட்டுப்பாடு
(ஐ) இருப்புக் கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

## தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**2011 திசெம்பர் 31ம் திகதியன்று முடிவுற்ற வருடத்திற்கான கணக்குக் கூற்று பற்றி, 1971ன் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ( சீ) வாசகத்தின் பிரகாரம், கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

**2. நிதிக் கூற்று**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**(அ) நியம இல 02**

எமது அதிகாரசபை வர்த்தகநோக்குடன் செயலாற்றும் தாபகமல்லாததுடன், மொத்த ஆகு செலவானது பெறுமானத்தில் கணக்கிடப்பட்டது.

**ஆ) நியம இல 24**

2011ம் ஆண்டில், காசுப் பாய்வு கூற்றுக்கு சீராக்கிய தவணையிட்ட வருமான வேறுபாடு, நிதி நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், அது இறுதி கணக்கை தயாரிக்கும் பொழுது, நிதித் தன்மையற்ற பகுதியில் குறிப்பிடப்படும் என்பதை அறிவிக்கிறேன்.

**2.2.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

(அ) 60,512 ரூபாவானது, ஒறுகொடாவத்தை தன்னியக்க மோட்டார் எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தின் சேமிப்பு கணக்கின் வட்டி வருமானமாவதுடன், குறிப்பேட்டில் குறிப்பிடப்படாததுடன் இறுதி கணக்கில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) 2011.12.31ம் திகதி வங்கி அறவிட்ட கட்டணம், 2012 மீதியில் சீராக்கப்பட்டுள்ளது.

(இ) 2012ம் வருடத்தில் செவ்வையாக்கப்பட்டுள்ளது.

(ஈ) அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய காசு, பணிக்கொடை செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அறவிடப்பட்டுள்ளது. எனினும், சில அலுவலர்களிடமிருந்து, அதிகாரபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் தாமதம் காரணமாகவும் சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டதன் காரணமாகவும் ஒரு மாதத்திற்குள் பணிக்கொடைப் பணம் செலுத்துவதானது கடினமாகியுள்ளது.

(உ) 2008 மற்றும் 2009 ஆகிய வருடங்களில் உரியவாறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் படாததால் உறுதியாக பணத்தை குறிப்பிட முடியாததால், பெற்ற பணம் மாத்திரம் வருமானமாக கொள்ளப்பட்டது.

தற்பொழுது, உரியவாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதன்படி சரியாக வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஊ) 2012 ம் வருடத்திலிருந்து VAT அறவிடப்பட்டு, தேசிய வருமான ஆணையாளருக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பயிற்சி நிறுவகம் மற்றும் வெள்ளவத்தை பயிற்சி நிலையம் ஆகியவற்றை அதிகாரசபைக்கு கையேற்கும் வரை, கட்டடங்களிள் பெறுமானங்களை கணக்கீடாக்க இயலாதுள்ளது.பேறுவளை பயிற்சி நிலையமானது, தொலைதொடர்பு ஒழுக்காற்று

ஆணைக்குழுவிற்கு உரிய காணியில் அமைந்துள்ள கட்டடமொன்றில், வாடகையின்றி பராமரிக்கப்பட்டு வருகிறது. கல்முனை பயிற்சி நிலையம் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. இதன் படி, காசுக்கூற்றுக்களில் உட்படுத்த இயலாது.

(எ) 2012ம் வருடத்தின் இறுதி கணக்கீடுகள் ஆக்கிய போது செவ்வையாக்கப்பட்டுள்ளது.

(ஏ) அரசாங்கத்தின் மதிப்பீட்டின் படி, 1,400,000 ரூபா பெறுமதியான காணியின் அறிதியுறுதி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 30,000 ரூபா பிணையாளிகளிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன், மீதிப் பணத்தை அறவிடும் நிமித்தம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3 <u>வடுத்தீடாக்கப்படாத கட்டுப்பாட்டு கணக்கு</u>

(அ) 2012 ஒக்டோபர் 31 ம் திகதி இம் மீதி தீர்க்கப்பட்டுள்ளது. இவ்வருடத்துக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் தொடர்பாக 2010 க்கு முன் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல் நிமித்தம் 2012 நிதிக் கூற்றினை தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சில மீதிகளின் வேறு பாடானது பகுதி நேர கணக்கின் மீதியாகும். வங்கி கணக்கு மீதிகள், செலவு மீதிகளாகிருப்பின், அம் மீதிகள் பலவித கடன்பெற்றோரின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

2.2.4 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு</u>

(அ) கடிதங்கள் மற்றும் நினைவுபடுத்தல்கள் மூலம் இந்தக் கணக்குகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதும், உரிய தரப்பினர் பதிலளிக்காமை, தாமதம் ஏற்படுவதற்கு காரணமாயிருந்ததுடன், தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு, விரைவு படுத்தப்படுவதனை அறிவிக்கிறேன்.

(ஆ) பழம் மீதிகளை பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் அங்கீகாரம் பெற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இச்செய்முறை முடிவுற்றதும் இப்பிரச்சினை தீர்ந்து விடும்.

(இ) 2011/12/31ம் திகதியில், கடனளித்தோர் மீதிகளின் கூட்டுத் தொகை 33,417,017/= ரூபாவானதுடன் 2012/11/16 ம் திகதியாகுமிடத்து, 12,369,893.82 ரூபா தீர்க்கப்பட்டுள்ளது. தீர்க்கப்படாத 2,1047,123.18 ரூபாவின் 14,268,317.18 ரூபா உள்ள கொடுக்கல் வாங்கல்களாகும். இப்பொழுது தீர்க்கப்படாது உள்ள கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.5 <u>கணக்காய்வுக்கு சான்றுகள் இல்லாமை</u>

(அ) கையிருப்பு

வருடாந்த பொருள் அளவை நடாத்தப்பட்டு அளவை சபையின் அறிக்கை அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

**காணி**

**உரிமம் கையேற்கப்பட்ட எல்லா காணிகளினதும் அறுதியுறுதிகள் மற்றும் ஆவணங்கள் சட்டப் பிரிவில் உள்ளன. உரிமை கையேற்க வேண்டிய சில காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.**

**முற்பணம் நானாவித கடனாளிகள், கடனளித்தோர்**

**கடிதங்கள், நினைவுபடுத்தல்கள் அனுப்பிய போதும், உரிய தரப்பினர் பதிலளிக் காததால் நிலுவை சான்று வழங்குதல் சிக்களாக உள்ளது.**

**வங்கி மற்றும் காசு நிலுவை**

**சான்றுகள் உள்ளன.**

**நிலையான வைப்பு**

**நிலையான வைப்பு சான்றுகள் உள்ளன.**

**2.2.6 சட்டம், விதிகள், ஒழுங்கு விதிகள் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை**

**(அ) சட்டம், விதிகள், ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுக்கு உசாவல்**

**2008 சனவரி 01 ம் திகதியும் 1530/3 இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானி பாத்திரிக்கை அறிவிப்பு.**

**முத்திரை கட்டணம் அறிவிடுதல் தொடர்பாக எல்லா பிரிவுகளுக்கு அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் முத்திரை கட்டணம் அறிவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2011 வருடத்திற்கு முத்திரை பெறாத தாபனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு, முத்திரை வரி அறிவிடுவதற்கு நடவடிக்கைகு எடுக்கப்பட்டுள்ளது.**

**(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி.**

i **இல 188 (20**

**இது நிதி கட்டளை நிமித்தம் அறவிடுவதற்கிருந்த காசாகும். இது 2009 ல் 70,711/- ரூபா அறவிட்டதன் பின் மீதியிருந்த காசாவதுடன், இதனை தீர்ப்பதற்கு மேலும் நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

ii

iii **இல 371 (2) (இ)**

**கொடுக்கப்பட்ட முற்பணத்தை, உரிய செயற்பாடு முடிக்கப்பட்டதும், திருப்பிச் செலுத்துவதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.**

iv **இல 396**

**வலிதான காலம் கடந்த காசோலை தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.**

**(இ) பொது நிருவாக சுற்றறிக்கைகள்**

i **1992 ஆகஸ்ட் 17 ம் திகதியும் இல 26/92 மற்றும் 1997 ஆகஸ்ட் 03 திகதியும் கொண்ட இல**

**26/92 (1) சுற்றறிக்கைப் படி,**

**வாகனங்களில் அரச இலச்சினையும் நிறுவகத்தின் பெயரும் குறுப்பிடப்பட்ட ஒட்டிகள் ஒட்டப்பப்பட்டுள்ளன.**

ii **1999 ஒக்தோபர் 08 ம் திகதிய 22/99 ம் இலக்க சுற்றிக்கையில் 1.1.6 ( v) மற்றும் 1.3.1 (111) வாசகம்**
**பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர்கள் ஆகியோருக்கு தற்பொழுது,தொகுதி வாகனமொன்றை ஈடுப்படுத்தி போக்குவரத்து வசதியளிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படும். இரவில் வாகனங்களை நிறுத்துவதற்கு நிறுவக தலைவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.**

**(ஈ)** **<u>நிதி அமைச்சின் சுற்றறிக்கை</u>**

**2003 யூன் 02 ம் திகதிய பிரிட்/12 கொண்ட அரச வியாபாரம் சுற்றறிகையின் 8.3.9 மற்றும் 9.4 வாசகங்கள்.**

**அமைச்சிடம் விடுவிக்கப்பட்டிருந்த H.B 1601 என்னும் வாகனம் 2012, யூலை மாதம் தொடக்க அதிகாரசபையினால் கையோற்கப்பட்டுள்ளது.**

**(உ)** **<u>2006 சனவரி 25 ம் திகதி என்.ஜீ.ஏ./ 8 ம் இலக்க தேசிய தேடிவழங்கல் பிரதி நிதித்துவ நிறுவகத்தின் சுற்றறிக்கை</u>**

i **3.1.4, 3.2..2, மற்றும்**
**3.4.2 வாசகங்கள்**
**தேடிவழங்கல் கைந்நூலின் அறிவுறுத்தல்களின் படி, தேடி வழங்கல் செய்முறையின் போது, முடிந்த மட்டும் போட்டி ரீதியில் விலை கூறல்கள் அழைக்கப்பட்டு வினைத்திறனுடன் உரிய நேரத்தில் இலாபகரமும் தகுதியானதுமான பொருள்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் இவ் அதிகாரசபை நிமித்தம் சிறிய அளவான திணைக்கள தேடிவழங்கல் குழுக்கல் அமைக்கப்பட்டிருந்ததுடன் தேடி வழங்கல் கைந்நூலின் அறிவுறுத்தல்கள் படி அங்கீகரிப்புக்குரிய எல்லைகள் அளிக்கப்பட்டிருந்தன.**

ii **3.4.1(ஈ) வாசகம்**
**முடிந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் நிருமாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தக்காரர்கள் ஐவரிடமேனும் விலை கூறல்கள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வாறான ஒப்பந்தகாரர்களை போதுமானளவு தேடிக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், குறைந்த விலைகூறல்களை பெற்ற சில சந்தர்ப்பங்கள் இருக்க முடியும்.**

iii **8.13.3 வாசகம்**
**ஒப்பந்தவேறுபாடு அங்கீகரிக்கப்படும் அசாத்திய வேறுபடுத்தல் எல்லையான 10% ல் இருந்து ஒப்பந்த பெறுமானத்தின் 30% வரை, நிறுவக தலைவரின் அங்கீகாரத்துடன்,**

செயல் நிறைவேற்ற முடிமென, தேடி வழங்கல் வழகாட்டலில் உள்ளது.

2.2.7 போதுமான தத்துவமின்றி உறுதிப் படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலர்களின் வருடாந்த விடுப்புகள். முற்பணக் கொடுப்பனவு ஆகியன தொடர்பாக மட்டும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தில் ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

2.2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இந்த அலுவலர்களை பயிற்சி பாடநெறிகளுக்கு சேர்த்துக் கொள்ளும் போது, பயிற்சி தேவை அடையாளங்காணப்பட்டு, அவர்களின் விருப்பத்தின் பேரில் உரிய அங்கீகாரத்துடன் ஒப்பந்த பிணையுடன், பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை வினையமாய் உரைக்கிறேன்.

அவ்வலுவலர்கள் நிரந்தர பதவியணியினராவதால் பயிற்சியில் ஈடுபடுத்தப் பட்டனர். எதிர்காலத்தில் நீண்டக்கால பாடநெறிகள் வழங்கும் போது, சேவைக்காலம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(ஆ) அறவிட முடியாது போன பணத்தை அறவிடுவதற்க்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிபெறுபேறு

| | |
|---|---|
| 2011ம் வருடத்தின் இறுதிக்க கணக்குகள் படி அதிகரிப்பு | 44,967,229.55 |
| செலவின அதிகரிப்பு | 115,796,702.79 |
| | 70,829,473.24 |

இதன் படி 2010 ம் வருடத்தை விட பெறுவனவு குறைந்துள்ள போதும் செலவினம் பெருமளவில் அதிகரித்திருப்பதால் பற்றாக்குறை கூடியுள்ளது.'

3.2 விவரமான நிதி மீளாய்வு

நடந் தேறும் செய்திட்டங்களின் கீழான கட்டட பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன் கட்டடங்கள் கணக்குகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதால் ஆதனங்களின் பெறுமானம் நடந்தேறும் மூலதனத்தில் பெறுமானம் குறைந்து காணப்பட்டது.

பொருள் கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட பணத்துக்கான பொருட்கள் 2012 ம் வருடத்தில் கிடைத்தன.

செலுத்த வேண்டிய வைப்புகள் மற்றும் செலுத்த வேண்டிய செலவினம் 2010 வருடத்தை விட 2011 வருடத்தில் அதிகரித்துள்ளது.

பயிற்சி நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. நிலையான ஆதனங்கள் அதிகம்

கொள்வளவு செய்யப்பட்டுள்ளதுடன் எமது வரவு செலவுப் படி, மூலதனம் அதிகரித்து அதிகமாக கொள்வனவு செய்ய முடியாதுள்ளது. இதன்படி பின் தவணை வருமானம் அதிகரிக்கும்.

மின். நீர், சிட்டை, நிலைய வளவுகளுக்கான வாடகை, போன்ற செலவினங்கள் பயிற்சி மூலம் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் அதிக பொருட்கள் உரிய தாபனங்களால் காலத்திற்குக் காலம் திருத்தப்படும் விலைகளின் படி அதிகரிக்கும். எமது கட்டுப்பாட்டுக்கு மீறிய காரணங்களால் இது நடை பெறும்.

3.3 <u>செலவினங்களின் அதிகரிப்பும் மூலதன தேய்வும்.</u>

செலவினங்களின் அதிகரிப்பும் மூலதன தேய்வும்.\

4. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

4.1 <u>செயலாற்றுகை</u>

4.1.1 (அ) மாவட்ட அலுவலகங்களில் போதுமான பரிசோதகர்கள் இல்லாமையும் பயிற்சியில் ஈடுப்படுத்துவதற்கு விண்ணப்பதாரிகள் இல்லாமையும் காரணமாக நோக்கடைவினை எட்ட முடியாது போனது.

(ஆ) எமது அதிகாரசபை ஆட்சேர்ப்பு எந்தவொரு நாளிலும் நடைபெறும். எனவே வழக்கத்தின்படி, ஆட்சேர்ப்பு நோக்கடைவு ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும், பயிற்சி பூர்த்தியாக்கல் இலக்கடைவு ஆக்கப்படவில்லை.

சில சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிகள் இறுதிப் பரீட்சையில் சித்தியடையாது போகலாம். அச்சந்தர்ப்பங்களில் மீண்டும் பரீட்சை வைக்கப்பட்டு சாளன்றிதழ் வழங்கப்படுவதுடன், இறுதி மாதங்களில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சான்றிதல் வழங்குதல்2012 வரை நீட்சியடையும் தன்மை உள்ளது.

பயிற்சியின் இடையில் பயிலுநர்கள் பயிற்சியை விட்டுச் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இச்சந்தர்ப்பங்களில் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சைகளின் எண்ணிக்கை குறைந்து, வழங்கப்படும் சான்றிதழ்களின் எண்ணிக்கையும் குறைகிறது. இறுதி மாதங்களில் கிராமிய மற்றும் அமைவிட பயிலுநர்களின் தரவு அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுமிடத்து சான்றிதழ் வழங்குதல் அதற்கடுத்த வருடம் வரை தாமதமாகிறது.

(இ) 295 நிகழ்ச்சி முறைகளை நடாத்துவதற்கு இலக்கடைவு ஆக்கப்பட்ட போதும் 364 நடாத்தப்பட்டன.

மாவட்ட அலுவலர்கள் தாபிக்கப்பட்டமை பிரசே ரீதியான பிரசார நடவடிக்கைகள், பங்கு பற்றுநர்களின் தொகை அதிகரிப்பு, பாடசாலைகளில் தொழில் வழிக்காட்டல்

அலுவலர்களின் நிகழ்ச்சி முறைக்கு அதிக கேள்வி காணப்பட்டமை ஆகியன இதற்கு காரணங்களாகும்.

(ஈ) நிருவாக மற்றும் நிதி நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சி முறைகள் நடாத்தப்பட்ட போது அதிக அலுவலர்களை பங்கு பற்றச் செய்ததுடன், அந்த நிகழ்ச்சி முறைகளை தலைமை அலுவலகத்தில் நடத்தியமையால் அகுசெலவு குறைந்ததுடன், அதிக நிகழ்ச்சி முறைகளை நடாத்த முடிந்தது.

(உ) முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சி முறைகள் 05, கேகாலை, புத்தளம், கம்பஹா, கண்டி, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

நிருவாக ரீதியான காரணங்களால் இவ்வாறான நிகழ்ச்சி முறைகளுக்கு முன்னுரிமை அளித்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.

(ஊ) முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவினால் நோக்கடைவாகக் கொண்டிருந்த பாடநெறிகளை, வளவாளர்கள் பற்றாக்குறை மாவட்ட அலுவலகங்களில் பரிசோதகர்கள் பற்றாக்குறை ஆகியன காரணமாக, நடாத்த முடியாதிருந்தது.

4.2 <u>முகாமைத்துவ வினைத்திறமையின்மை</u>

(அ) மாதாந்த செலவினத் தேவையின் படி உரிய அமைச்சின் விதப்புரையுடன் திறைசேரியிலிருந்து பணம் வேண்டப்படும்.

(ஆ) இவ்வாகனங்கள் நிமித்தம் சுங்கப் பணம் இலங்கை சுங்கத்தின் மதிப்பீடு படி உரிய அமைச்சினதும் திறை சேரியினதும் இணக்கத்துடன் செலுத்தப்பட்டது.

இவ்வாகனம் இத்திகதியில் எதுவித விபத்துக்கும் உட்படாததால் நி.ஓ. 104 ன் படி விசாரணை அவசியமில்லை.

இவ் வாகனம் விபத்துக்குட்படாததால், அவ்வாறான பழுதுபார்ப்புக்குரிய எதுவித கொடுப்பனவும் ஏற்படுத்த வில்லை இத்தினத்தின் போது ஓட்டுநர் யாரும் ஈடுபடுத்தப் பட்டிருக்க வில்லை.

(இ) 2010 பெப்ரவரி 23 ம் திகதி அதிகாரசபைக்கு பெறப்பட்டிருந்த வாகனத்தை பழுதுபார்ப்பதானது பொருளாதார ரீதியில் நன்மை பயக்காததால், இதுவரை பழுது பார்ப்பு நடாத்தப்படவில்லை. இதன் நிமித்தம் அமைக்கப்பட்ட செயற்குழு, இதனை பயிலுநர்களின் பயிற்சிக்கான பொருளாக ( Training Consumable) உபயோகிக்குமாறு, விதந்துரைத்தது.

(ஈ) 2012 ம் வருடத்தில் உரிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு உறுதியான வருமானம் 201 ம் வருடத்தின் இறுதி கணக்கில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) ஓரங்க தொலைக்காட்சி நாடகத்தை தொழில் வழிக்காட்டல் நிமித்தம் உபயோகிக்கும் வகையில், செவ்வை படுத்துவதற்கு பணிப்பாளர் கூட்டத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

4.3 **செயற்பாடற்ற குறைப் பயன்பாடான ஆதனங்கள்**

**வருட இறுதியின் போது, திறை சேரியினால் வழங்கப்படும் நிதி, சனவரி, முதல் இரு வாரங்களில் கிடைக்காததால், புதிய வருடத்திற்கான பணம் கிடைக்கப்படும் வரையில் ஒன்று சேர்ந்த செலவினங்களுக்கு கொடுப்பனவு செய்தல் நிமித்தம் நிதி தக்க வைக்கப்படுகிறது.**

4.4 **அடையாளங் காணப்பட்ட நட்டங்கள்**

**உரிய** Desktop **கணனிகளை கொள்வனவு செய்யும் பொழுது கூறுவிலை சமர்ப்பித்திருந்த** Metropolitan **நிறுவகத்தினுடையவை விவசக் கூற்றுடன் பொருந்தவில்லை. மேலும், விலை கூறுகள் முன் வைக்கப்படும் முதல் சந்தர்ப்பத்தில் கேட்கப்பட்ட விவரக் கூற்றுக்கு இணங்காத விலை கூறுகளாக (** Non responsive bid) **தொழிநுட்ப மதிப்பீட்டின் போது விலக்கப்படும். இதன் படி, விலை கூறுகளின் எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது. நாடெங்கிலும் உள்ள கணனிப் பயிற்சி நிலையங்களுக்கு கணனிகள் கொள்வனவு செய்ததால், அது பற்றி கவனத்தில் கொள்ளப்பட்டது.** Metropolitan office (Pvt. Ltd) **நிறுவகத்தில் சேவை நிலையங்கள் 11 உள்ளனவாயினும் அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அதன் சேவை நிலையம் இல்லை.** P.C House PLC **நிறுவகத்தின்சேவை நிலையங்கள் நாடெங்கிலும் 34 இருப்பதால், இந்நிறுவகத்தின் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன.**

**மேற்படி விடயங்களை கவனத்தில் கொள்ளுமிடத்து, 47,400/- ரூபா வீதத்தில் கணனி கொள்வனவு செய்ததால் அதிகாரசபைக்கு பொருளியல் ரீதியாக நட்டமேற்படவில்லை.**

**எதிர்காலத்தில், பழுது பார்ப்புக்கு முன் வைக்கப்படும் விலை கூறுகளை விட கூடிய விலை கூறுகளுக்கு, பழுது பார்ப்புகள் செய்து கொள்வதாயின் தகைமை பெற்ற தொழிநுட்ப அலுவலரிடமிருந்து பெற்ற தொழிநுட்ப அறிக்கையின் படி அதனை செய்வேன்.**

4.5 **வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்கிய அதிகாரசபையின் வளங்கள்.**

**ஒரு அலுவலரின் சம்பளம் அதிகாரசபையிடம் மீளளிக்கப்படுவதுடன் இன்னுமொருவர் அதிகாரசபையின் சேவையில் அறிக்கைபடுத்தியுள்ளார். இருவர் சேவையிலிருந்து விலகியுள்ளனர் மீதியாட்களின் சம்பளங்களை மீளளிப்பு செய்யுமாறு, அமைச்சிடம் வேண்டியுள்ளதுடன், எதிர்காலத்தில் அப்பணம் மீளளிக்கப்படும்.**

4.6 **பதவியினர் நிருவாகம்**

**2012ம் வருட இறுதியின் போது, நிறைவேற்று பதவிகள் 03 வும் எமது எழுது வினைஞர் மற்றும் சார்பான பதவிகள் 102 வும் சிற்றூழியர் பதவிகள் 22 வும் ஆட்சேர்க்கப்படவுள்ளன.**

4.7 **வாகன துஷ்பிரயோகம்**

4.7.1 **எதிர் காலத்தில் வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகள் 104ன் படி செயல்படுவேன்.**

4.7.2 அந்த இணைப்பின் விபத்தில், வாகன பழுது பார்ப்பு செலவினங்களும் வாகன சேவைக்கான செலவிட உட்படுத்தப்பட்டுள்ளன.

4.7.3 அகற்றப்பட்ட உதிரிப் பாகங்களை ஒழுங்கமைய ஆவணப்படுத்துவதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 5. கணக்கு செய்முறைகளும் கட்டுப்பாடும்

### 5.1 நிதிக் கூற்றுகளை சமர்பித்தல்

கையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீடு கணனிமயப்படுத்தப்பட்டதுடன் தேசிய நறுவகங்களும் மாவட்ட அலுவலகங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. இதனால் 2012 ம் வருடத்தில் முன்னேற்றம் பெறப்பட்டது.

### 5.2 வருடாந்த கூட்டிணைவு திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும்

தேவையான ஒதுக்கீடு கிடைக்காததால் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாது போனது. எதிர்காலத்தில் பொறுப் பொதுக்கம் கிடைக்காமை திட்டமிட்டப்பட்ட போதும், செயற்படுத்த முடியாத அளவினை திருத்தியமைக்க தேவையான செயற்பாடுகள் எடுக்கப்படும்.

### 5.3 உள்ளக கணக்காய்வு

2011ம் வருடத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெறுதல், விலகுதல், மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு எண்ணிக்கை ஆகியன அதிகரித்திருந்து, இவை பற்றி 100% பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. ஒப்பந்த கொடுப்பனவு பரிசீலனை செயற்பாடுகள் வருடம் முழுதும் இருந்ததுடன் இங்கும் 100% பரிசீலனை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் படி, கணக்காய்வு புலனாய்வுகள் 17 க்கும் அதிகம் நிறைவேற்றப்பட்டன.

பதவியினர் தொகை போதாதவிடத்தும் 2012 ம் வருடத்தில் வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் அதிக வீத புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.4 வரவுச்செலவு கட்டுப்பாடு

மின் நீர் சிட்டைகள், நிருவாக வளவுக்கான வாடகை,போன்ற செலவினங்கள், பயிற்சி மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் அவ்வவ் நிறுவனங்கள் மேற்கொள்ளும் திருத்தங்களின் படி அதிகரிக்கும். எமது கட்டுப்பாட்டை மீறி இவை ஏற்படலாம்.

6. **முறைமையும் கட்டுப்பாடும்**

**கணக்காய்வினால் காட்டப்பட்ட குறைகள் பற்றி விசேட கவனம் செலுத்தி திருத்துவதற்கும் இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கும் உரிய அலிவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.**